சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **19 / 2015**

பெயர்: காளியப்பன் பி.வா.சா. 1 தேதி **18.02.2026**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. சிறும்பாயி அம்மாளை மாமூண்டி கவுண்டர் எப்பொழுது திருமணம் செய்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி திருமணத்திற்காக ஆவணங்கள் எதுவும் இல்லை. மேற்படி மாமூண்டி கவுண்டருக்கு சுமார் 30, 35 ஏக்கர் பூர்விக நிலம் உள்ளது. எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு நிலம் என்று தெரியாது. மேற்படி பூர்விக சொத்தில் உள்ள மோட்டார் பம்பின் மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மாமூண்டி கவுண்டர் கிரையமாக 5 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளார். மேற்படி கிரையத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியாது. யாரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்று தெரியுமா என்றால் 1960, 1965ம் ஆண்டில் கிரையம் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி கிரையத்திற்கு எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்றால் ரூ.65,000/- கொடுக்கப்பட்டது. மேற்படி கிரைய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது சகோதரிகள் இருவரும் உள் ஊரில் தான் திருமணம் செய்துள்ளார்கள். எனக்கு 10வயதாக இருந்தபொழுது எனது தாயாருடன் சேர்ந்து மணியாரம்பட்டியில் குடியிருந்தோமா என்றால் 1 மாதம் மட்டும் இருந்தோம். என்ன வருத்தத்தில் நாங்கள் அவ்வாறு சென்றுவிட்டோம் என்றால் எனது அக்கா சொந்தில் கல்யாணம் செய்ய மறுத்ததால் நானும், எனது தாயாரும் வருத்தத்தில் மணியாரம்பட்டிக்கு சென்றுவிட்டோம். நானும், எனது தாயாரும் மணியாரம்பட்டியில் தான் குடியிருந்தோம் என்றாலும், எனது அப்பாயி இறந்த பின்னர் தான் ஊருக்கு வந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் குடியிருக்கும் வீடு கெட்டிமெத்தை வீடு. ஆரம்பத்தில் எனக்கு ஓட்டு வீட்டை எனது அப்பா ஒதுக்கி கொடுத்தார்.

2. மேற்படி ஓட்டு வீட்டில் யாரும் இல்லாமல் சும்மா தான் உள்ளது. கெட்டிமெத்தை வீட்டை நான் தான் கட்டினேன். வாதிகள் வடக்கு புறத்தில் ஆஸ்பெஸ்டாஸ் சீட்டு போட்ட வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். அதன் அருகில் கெட்டிமெத்தை வீடு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி கெட்டிமெத்தை வீடு பூர்விக வீடு. மேற்படி கெட்டிமெத்தை வீட்டில் வாதிகள் தான் குடியிருந்து வருகிறார்கள். எனது தகப்பனார் கிரையம் வாங்கியதாக சொல்லக்கூடிய சமயத்தில் நான் உடன் இல்லை என்று சொன்னால் நான் உடன் இருந்தேன். நான் கிரையம் வாங்கிய சமயத்தில் உடன் இருக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் தான் மேற்படி எனது தகப்பனாருடன் இருந்து மேற்படி சொத்தை கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே

பாகப்பிரிவினை கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண். 1/1995 என வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் எனது தகப்பனார் சிறும்பாயியை தான் கல்யாணம் செய்திருந்ததாகவும், குஞ்சம்மாளை திருமணம் செய்யவில்லை என்று தான் வாதம் புரிந்துள்ளேன். மேற்படி வழக்கில் எனது தகப்பனார் மேற்படியார்கள் இருவரையும் ஒரே மேடையில் வைத்து 1948ம் ஆண்டு திருமணம் செய்ததாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. முதல் விசாரணையில் சொல்லப்பட்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான்.

3. மாமுண்டி கவுண்டர் முதலில் தாலிகட்டி குஞ்சம்மாளை திருமணம் செய்தார் என்றாலும், அதன்பின்னர் சிறும்பாயியை திருமணம் செய்தார் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்குரிய பட்டா ஆதியில் யார் பெயரில் இருந்து என்றால் எனது அப்பா பெயரில் இருந்தது. தற்பொழுது யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. எனது தகப்பனாரின் பூர்விக சொத்து மற்றும் கிரைய சொத்தை பராமரிப்பு செய்வதற்காக கடவூர் இந்தியன் ஓவர்சிஸ் வங்கியில் ரூ.3,00,000/- கடன் பெற்றிருந்தாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வழக்கு சொத்தில் பைப் லைன் உள்ளதா என்றால் இல்லை. எனக்கு வழக்கு சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், வழக்கு சொத்தில் தற்பொழுதும் பைப் லைன் உள்ளது என்றாலும், வாதிகள் மேற்படி சொத்தை அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளிற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.02.18 18:48:50 +0530

சார்பு நீதிபதி

குளித்தலை.